பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

சரமரஹஸ்யம்

முமுக்ஷுவான சேதனனுக்கு மோக்ஷத்திலே இச்சையுண்டாம் போது ரஹஸ்யத்ரய மறியவேணும், ரஹஸ்யத்ரயமாவது திருமந்த்ரமும், த்வயமும் சரமச்லோகமும் இவற்றுக்கு ப்ரகரணமென்றும், ப்ரயோஜனமென்றும் இரண்டாயிருக்கும். இதில் ப்ரகரணமறிகையாவது ரஹஸ்யத்ரயத்திலுண்டான வர்த்தவிசேஷங்களைப் பதங்கள்தோறும் ஸக்ரமமாகவறிகை. ப்ரயோஜனமறிகையாவது:- தாத்பர்யமறிகை. திருமந்த்ரத்துக்கு நாராயணபதமும், த்வயத்துக்கு சரணபதமும், சரமச்லோகத்திற்கு ஏகபதமும் தாத்பர்யமாயிருக்கும். இந்த பதத்ரயங்களிலுமுண்டான பரமார்த்தம் யதார்த்தமாக வறிய வேணும். திருமந்த்ரத்தில் நாரபதத்திலே சேதநாசேதநங்களடைய வெல்லாஞ் சொல்லிற்றேயாகிலும், நாரபதத்துக்கு அவன் விக்ரஹத்திலே யூற்றமுமா யிருக்கும். விக்ரஹந் தானிரண்டு விதமாயிருக்கும். அதாவது சேதனமென்றும்

அசேதனமென்றும். இதில் சேதனமென்கிறது நம்மாழ்வாரை. அசேதனமென்கிறது பார்த்வாதிகளில் அவன் பரிக்ரஹித்த திவ்யமங்கள தேஹங்களை. அதுக்குமிதுக்கும் நெடுவாசியுண்டு. இது நினைவிலே யெழுந்திருந்து விநியோகப்படும். அதுக்கு இவன் தானறிந்து யத்நிக்கவேணும். அங்கு போகவேளையாநந்தம் சரீரிக்கே உள்ளது. "அறிவாருயிரானாய்" என்கிறபடியே இங்கு சரீரசரீரிகளிருவர்க்குமானந்தமுண்டு. திருமந்த்ரத்திலே நாரபதத்தாலே ஆழ்வாரை யீஸ்வரனுக்கு திருமேனியாகநுஸந்தித்து, அயநபதத்தாலே ஆழ்வாருக்கு ஈச்வரனையுயிராகவநுஸந்திக்கை. அங்ஙனன்றிக்கே, "என்னதுன்னதாவி" என்றும் "ஜ்ஞாநீத்வாத்மைவமே மதம்" என்றும்; இவரை அவனுக்குயிராக வநுசந்திக்கை. அங்ஙனன்றிக்கே ஈச்வரன் நினைவாலே ஸம்பந்த மறிகையாவது:— சரீராத்ம ஸம்பந்தம் போலே ஆழ்வாருக்குமீச்வரனுக்கு முண்டான ஸம்பந்தமென்றறிகை. சரீரத்துக்கும் காரணத்துக்குமுண்டான ஸம்பந்தம்போலே ஆழ்வாருக்கும் நமக்குமுண்டான ஸம்பந்தமென்றறிகை. த்வயத்துக்குத் தாத்பர்யம் சரணபதத்திலே ஆழ்வாரை ஈச்வரனுக்குத் திருவடிகளாக அநுஸந்தித்து, திருவடிகளை உபாயமாகப் பற்றும்போது ஆழ்வாரையே யுபாயமாகவநுஸந்தித்துப் பற்றவேணும். சரமச்லோகத்தில் "மாம்" என்று தன்னைத்தொட்டுக்காட்டி, 'ஏகம்' என்று கையும் ஞானமுத்ரையுமாய் ஆசார்யபதத்தையேயிட்டுக்கொண்டிருக்கிற யென்னையொருவனையே உபாயமாகப் பற்றென்று விதிக்கையாலே ஆழ்வார் ஒருவரையுமே உபயமாகப் பற்ற வேணும். ஆழ்வாரைப் பற்றும்போது அவர் திருவடிகளைப் பற்ற வேண்டுகையாலே எம்பெருமானார் திருவடிகளோட்டை ஸம்பந்தமே யிவ்வாத்மாவுக்கு உஜ்ஜீவனம். இதற்கு ப்ரமாணம் "கண்ணிநுண்சிறுத் தாம்பு"ம் "நூற்றந்தாதி"யும். இவ்வர்த்தமறியாதவனுக்கு யாவதாத்மபாவி ஸம்ஸாரமநுவர்த்திக்கும். இவ்வர்த்த நிஷ்டரான வதிகாரிகளுக்கு ஆழ்வார் ப்ரபத்தியும் உடையவர் ப்ரபத்தியும் நித்யாநு ஸந்தேயமாகக் கடவது. இவ்வர்த்தம் ப்ரஸாதித்த ஆசார்யன் திருவடிகளே உபாயமாகக் கடவன.

சரமரஹஸ்யம் முற்றிற்று

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்